# DINAMALAR 22.03.2023

## உலக காடுகள் தினத்தன்று மரக்கன்றுகள் நடும் விழா



**கோவை, மார்ச் 21–**

கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் (ஐ.எப்.ஜி.டி.பி.,), உலக காடுகள் தினத்தை முன்னிட்டு, மரக்கன்றுகள் நடும் விழா நேற்று நடந்தது.

ஐ.எப்.ஜி.டி.பி.,இயக்குனர் குஞ்சுகண்ணன், மரக்கன்று நட்டு நிகழ்வை தொடங்கி வைத்தார். நாட்டு மரங்களை வளர்ப்பதன் வாயிலாக, சுற்றுச்சூழலை பாதுகாக்க முடியும், என்ற விழிப்புணர்வு சுவரொட்டியை அவர் வெளியிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், ''மரங்கள் மனித குலத்துக்கு வழங்கப்பட்ட மிக அருமையான பரிசு. எனவே, மரங்களை பாதுகாப்பது மனிதர்களின் கடமை. உலக காடுகள் தினத்தில் இந்தாண்டுக்கான கருப்பொருள், 'காடு மற்றும் ஆரோக்கியம்' ஆகும். எனவே, வளம் நிறைந்த காடுகளின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புக்கு, அதிக முன்னுரிமை அளிக்க வேண்டும்,'' என்றார்.

தொடர்ந்து, முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் கோவை மண்டல முதுநிலை மேலாளர் சரவணன் விழிப்புணர்வு உரை நிகழ்த்தினர்.

விழாவில், மாணவ, மாணவியர் பலரும் மருத்துவ குணம் கொண்ட மற்றும் பழமை வாய்ந்த மரக்கன்றுகளை, தாவரவியல் பூங்காவில் நட்டனர்.